# இரட்டைப்புலவர் ச



[[illegible]]

இது

கோவை, சாரதாவிலாஸ செந்தமிழ்ச்சங்கக் காரியதரிசி,

சி. கு. நாராயணசாமி முதலியாரால்

...பதிப்பிக்கப்பட்டது.

The Tamil Sangam Power Press, Madura.—191

தீஞ்சுவைப்பொக்கிஷம். இலக்கம் ௩.

28 MAR 1910
MADRAS.
693
1-10

உ
சிவமயம்.

# இரட்டைப்புலவர் சரிதம்.



[செந்தமிழிலிருந்து எடுக்கப்பட்டது.]

இது
கோவை சாரதாவிலாஸ செந்தமிழ்ச்சங்கக் காரியதரிசி,
சி. கு. நாராயணசாமி முதலியாரால்
தொகுக்கப்பட்டது.

The Tamil Sangam Power Press, Madura.—1909

உ

திருச்சிற்றம்பலம்.

22 MAR 1910

# இரட்டைப்புலவர் சரிதம்.

இப்புலவர்கள் வரலாறு ஒருவாறு "செந்தமிழ்" த்தொகுதி 3. பகுதி 12-ல் பத்திராசிரியர் ஸ்ரீமத்-ரா இராகவையங்காரவர்களால் வெளியிடப்பட்டுள்ளது. அவை "தமிழ்நாவலர் சரிதை"யிற் கண்ட சிலசெய்யுட் குறிப்புகளும், புலவர்கள் இன்னகாலத்தவர்களென்பதை விளக்கக்கூடிய இரண்டோரம்சங்களுமன்றிப் புலவர்களின் விசேடவரலாறுகளை விளக்குவனவாகக் காணப்படவில்லை. தமிழ்நாவலர் சரிதையிற்கண்டவரலாறுகள் மறைந்தொழியாதுலகிற்பரவியிருத்தல் வேண்டுமென்னுமோராவல் கருதி, நமது பத்திராசிரியர் வெளியிட்டிருப்பதாக விளங்குகின்றது. புலவர்களின் சரிதவிஷயங்களில் விசேடக்கவலைகொண்டிருந்த வெமக்குக் காஞ்சி ஸ்ரீமத்-பி. சே. முருகேசமுதலியாரவர்களால் வெளியிடப்பட்டுள்ள "தில்லைக்கலம்பகத்திலும்," மதுரை 'விவேகபாநு' பத்திராசிரியர், ஸ்ரீமத்-மு. ரா. கந்தசாமிக்கவிராயரவர்களால் வெளிவந்த "தமிழ்ச்செய்யுட்சிந்தாமணியிலும்" "செந்தமிழ்ப்பத்திரிகை" யிற்கண்ட "தனிச்செய்யுட்கோவையிலும்" இரட்டையர்வரலாறு சிலகாணப்பட்டன. இவைகளும் முன் செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களும் ஒழுங்குபெறத் திரண்டு ஓர் கோவையாகிச் சரிதவடிவாகச் செந்தமிழ்ப் பிரதியின் கண் வெளிவரின் நந்தமிழகத்தோர் கண்டுமகிழ்தற் கேதுவாமென்னுமோர் காரணங்கருதி இரட்டையர் வரலாற்றை இம்முறைப்பகுதியில் வெளியிடலாயினேம்.

இனி, இரட்டைப்புலவர்கள் வரலாறு வருமாறு:—

சோழமண்டல சதகத்தில்,

> யோகாம் பெரிய சோழியர்வாழ் வுடையா ரீகை யுடையாராய்ப்
> பாகாம் பழைய் கல்வியினும் பயின்மே ரொன்னும் பரிசறிந்தோர்
> காம் பானூர் கச்சியுலா விசைக்கும் புலவ ரிரட்டையர்கள்
> வாகாம பதியா மிலந்துறையால் வழங்குஞ் சோழ மண்டலமே.

*

எனவருதலால், இப்புலவர்கள் சோழநாட்டினுள்ள "ஆமிலந்துறை" என்னுந் தலத்துத்தோன்றியவர்களென்பது அறியப்படும். முற்ற வமுதிர்ச்சியாற்றெய்விக மமைந்த மூதுணர்புலவர்களாய் எங்கும்புகழ்பெற்ற "செங்குந்தமரபின்"கண், சிவனடிமறவாச் செல்வர்களாய்ச் சிறந்த இவ்விருபுலவர்களும் உறவின் முறைமையில் அத்தைமகனாகவும், அம்மான்மகனாகவும் அமைந்தார்கள். இவர்கள்பெயர் முறையே "இளஞ்சூரியர்" முதுசூரியரென்று தமிழ்நாவலர்சரிதை"யால் தெரிகிறது. ஆயின், இவர்களுள் ஒருவர் "முடமாகவும்" ஒருவர் "குருடாகவுமிருந்தமையின், இவர்களுக்குள்ள ஒற்றுமையால், குருடராயுள்ளவர்மேல் முடமாயுள்ளவர் ஏறிக்கொண்டு உலாவிவருவர். அதனாலவர்களுக்கு ஆதிநாள்முதலாக "இரட்டையரெனப்"பெயர்வழங்கலாயது. அக்காலத்தே இப்புலவர்களை அபிமானித்துக்காத்த வள்ளல்கள், சனியூர் வில்லிபுத்தூரரைப் பாரதவிருத்தம் பாடுமாறு வேண்டிய வக்கபாகை ஆட்கொண்டானாகிய "கொங்கர்கோனும்" கச்சியிலிருந்த "சம்பராயன்" என்பானும், மற்றோர் பாண்டியனுமெனத் தெரிகிறது. இவ்வரலாறுகள் தமிழ்நாவலர் சரிதையில்,

இரட்டையர் திருவக்கைக் கோங்கராயன் அசனம் இடுவித்தபோது பாடிய கவி.

* சாணர்க்கு முன்னிற்கு மாட்கொண்டராயன் றமிழ்க்கொங்கர்கோன்
பாணுற்ற வரிவண்டு சேர்வக்கை நகராதி பக்கத்திலே
பூணுக்கு வாரா திருப்பாய் விருப்பாகி யுயர்வானிலே
வீணுக்கு நின்னாக மெலிகின்ற தெவ்வாறு வெண்டிங்களே.

சம்பராசன் விகடச் சமுத்திபாடச்சொல்லப் பாடியது.

எறிக்கும் புகழ்க்கச்சி யேகாம்ப ரன்சம்ப னெண்டிசைக்கும்
பொறிக்கும் புலிக்கொடி யான்புயம் வேட்டபின் பூவையன்னாள்
வெறிக்குங் குமக்கொங்கை மீதே விழிசொரி வெள்ளந்துளித்
தெறிக்குந் துவலை பழிக்குஞ்சிந் தூரத் திலகத்தையே.

இதனைத், தொண்டமண்டல சதகமுடையாரும்,

---

* சாணர்—சதுரர்; விழுப்புண்பட்ட தழும்புடைமைபற்றி வீரர் எனினுமமையும். சாணம்-தழும்பு.

மேதைப் புலவரெண் ணேகாம்பரச் சம்பு மெய்ச்சநெகிழ்
காதைப் புலவ ரிரட்டையர் பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்ப வாண ருலாவுமந்த
மாதைப் பனுவலும் பாராட்டிடுந் தொண்ட மண்டலமே.

OFFICE OF THE REGISTRAR OF ... 28 MAR 1910 MADRAS.

எனச் சிறப்பிக்கப்பட்டிருப்பதுங் காண்க.

படைவீடு முற்றியிருந்த பாண்டியனுக்குப் பாடியது.

காற்றா லலைப்புண்டு கண்ணன் கடல்கடைந்து
மேற்றா னெடுத்து வளைத்தெய்து—மாற்றாத
செம்பொன் மலையில்லைச் சேலுக் கிடங்கொடுக்கச்
சம்பன் மலைகை தவா.

என்னுந்தலைக் குறிப்போடுவரும் பாடல்களால் இவற்றினதுண்மை கண்டறிக.

கலைமகளாரின் கருணைவிசேடம் சிறக்கப்பெற்ற இப்புலவர்களின் இளமைக்காலத்தே இவர்களின் தாய்தந்தையர் உயிர்நீத்தமைக்கு ஆற்றாதுவருந்தி அவர்களுக்குத் தாங்களியற்றவேண்டிய கடன்களை முடித்து அதுமுதல் சிவதலயாத்திரை செய்வானெண்ணிப் பிரதமத்தில் பூலோககைலாயமெனவும், கோயிலெனவும் புகழ்பெற்றுவிளங்கும் சிதம்பரக்ஷேத்திரத்தை யடைந்து சபாநாயகரைத் தரிசித்தார்கள். அக்காலத்தில், சிதம்பரத்துள்ள அடியார் குழாங்கள், அங்கே தரிசனத்திற்குவந்த இரட்டையர்களை நோக்கி, திருப்பாதிரிப் புலியூருக்குத் தொல்காப்பியத்தேவரியற்றியதுபோலச் சிதம்பரத்திற்கு நீங்கள் ஒருகலம்பகமியற்றியருளவேண்டும் என்றுவேண்டினர்.

இரட்டையர்கள்,

கோச்சகக்கலிப்பா.

* தொல்காப் பியத்தேவர் சொற்றதமிழ்ப் பாடலன்றி
நல்காத் திருச்செவிக்கு நாமுரைத்த தேறுமோ
மல்காப் புனறதும்ப மாநிலத்துக் கண்பிசைந்து
பல்காற் † பொருளழற்கும் பாற்கடலொன் றீந்தார்க்கே. ‡

(தமிழ்நாவலர் சரிதை.)

---

* தொல்காப்பியத்தேவர்—இவரொருபுலவர்.
† பொருளழற்கும்—பிள்ளையழுதற்கும்.
‡ இச்செய்யுள் திருவாமாத்தூர்க்கலம்பக வெட்டுப்பிரதிகளிலும் காணப்படுகின்றது; 'நானுரைத்தது' எனவும், 'பொருபினர்க்கு' எனவும்பாடம்.

என்னும் செய்யுளைக்கூறி, 'சிவபெருமான்மீது கலம்பகம் பாடுதற்கு யாம் வல்லேமல்லேம்' என்றார்கள். கேட்டவர்கள், அதனால் தடைபடலின்றி, அங்ஙனங்கூறினமை பற்றியே நன்குமதித்துக் கலம்பகம் பாடும்படி பின்னும் வற்புறுத்த, அவர்கள் அப்பொழுதுந் துணிவின்றித் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்திற் கயிறுசார்த்திப்பார்த்தார்கள். பார்த்தபொழுது,

"பாடுவார் பாமை பரிசில் வரிசையெல்லா
மாடுவா ரன்றி யயலா ரறிவாரோ
தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர்
பாடுவா ரோரிருவர்க் கிட்ட படைவீடே." (16)

என்னும்பாடல் அகப்பட்டது. அதனைக்கண்ணுற்ற இரட்டையர்கள் அச்செய்யுளின் பின்னிரண்டடியின் பொருளையறிந்து மனமுருகி, தம்மைப்பாடும்படி ஸ்ரீ ஆநந்தநடராஜர் கட்டளையிட்டருளியதாகவே நினைந்து துணிந்து செய்யத்தொடங்கிப் பலபாவினங்களமைந்ததாய் அம்மானை, புயவகுப்பு, மதங்கம், காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டுறுப்புகளுமியைந்த கலம்பகமென்னும் ஓர் பிரபந்தம்பாடி அரங்கேற்றியருள் பெற்றார்கள். அதன்பின், மற்றொருநாள் சபாநாதரைத் தரிசிக்கவேண்டிக் கோயிலுட் செல்லுகையில் ஒருவன்மிகவாடம்பரத்தோடு தமக்கெதிரில்வர அவனைப் புகழ்ந்து பாடினார்கள். அவன் கல்வியறிவில்லாதானாகையால் இவர்களைச் சம்மானியாது இறுமாந்திருப்ப, அதுகண்ட முடவர்,

"மூடர்முன்னே பாடன் மொழிந்தா லறிவரோ
வாடெடுத்த தென்புலியூ ரம்பலவா"—

என்றுரைத்தனர். அது கேட்டுணர்ந்த குருடர்,

ஆடகப்பொற்
"செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்னபய
னந்தகனே நாயகனா னல்."

எனமற்றதையுமுரைக்க, இவையெல்லாங்கேட்டு அவனருகிலிருந்த ஓரறிஞன் அவனுக்கிப்புலவர்கள் பெருமையைக்கூறிப் பரிசில்தரச்

செய்ய அதுபெற்றவிவர்கள் பின்னரங்குநின்றும் நீங்கித் "திருவாமாத்தூர்" என்னும் தலத்தையடைந்து அங்கெழுந்தருளிய அழகியநாதரைத் துதித்துத் திரும்புகையில், அத்தலத்துள்ள சிலர், இப்பெருமான்மீது ஓர் கலம்பகம் இயற்றியருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். அன்னோர் பிரார்த்தனைக்குவந்த புலவர்கள், "திருவாமாத்தூர்க்கலம்பகம்பாடி" அரங்கேற்றுவதானார்கள். அக்காலப் பிரபந்தத்துள்ள ஓர் பாடலிற் பம்பையாற்றிற்கு மேற்கரையிலுள்ள கோயிலென்று கூறியிருப்பதை அச்சபையிலுள்ளோர்கள் கேட்டுநகைத்து இப்பம்பையாறு மேற்கேயோடி யிருப்பதை இவ்விருவருள், கண்ணில்லார் காணுவிடினும், கண்ணுள்ளாரேனுங் காணவில்லையா? என்று பரிகசித்தார்கள். அஃதுணர்ந்த புலவர்களிருவரும் நமது வாக்கில் விளக்குவித்தருளிய திருவருட் செயலையுணர்ந்த பிறகே இப்பிரபந்தத்தை அரங்கேற்றி முடிப்போமென வெழுந்து போனார்கள். அன்றிரவு சிவபிரான் திருவருளால் சத்தமேகங்களும் ஆரவாரித்து அதிவிருஷ்டியாய்ப் பொழிந்தமையின், † அந்நதி முன்னோடியிருந்த வழியைத்தடுத்துத் தென்றிசையாயோடி வடதிசையாய்த் திரும்பும்படிசெய்தது சூரியோதயமாவதற்குமுன் இவ்வாறாயினமையின் அன்றுமுதல் இப்புலவர்களருளிய "மேற்கரைக்கோயில்" என்பதே மெய்யாய்விட்டது. அது கண்ட அத்தலத்தாரும் ஏனையரும் அதிசயமும் அச்சமுமுடையவர்களாகி இப்புலவர்களை வணங்கி யாங்களியற்றிய அபராதத்தை மன்னித்தருள்வீராகவென்று வேண்டினார்கள். உடனே திருவுளமிரங்கினவர்களாய் இவ்விருவரும் முன்னாளில் நிறுத்தியபாடலைத் தொடங்கிவாசித்து அரங்கேற்றிமுடித்துச் சிவபிரான் அருள்பெற்றனரென்ப. தமிழ்நாவலர்சரிதையின்கண், ஆறுவிலகியபாட்டு என்னுந் தலைப்பின்கீழ்,

---

† இதனைப் புலவர்புராணமுடையாரும்,

இன்றுமந்நதியவ்வாறொழுகுதலும்பெருவெள்ளமெய்துமாயின்
முன்றுலக்குவழியினும்போய்மாறைநகர்சூழ்தாலுமுறையிற்காண்பின்
குன்றுறழுமாணவங்கொண்டிகலும்பிளம்புலவீர்காள்கோடிகோடி
யென்றுபஞ்சாக்கரஞ்செபித்தாயினுமரன்பாலருள்பெறலேயேற்றமாமே.

எனக்குறிப்பிடுவதையுணர்க.

* ஆற்குழையோ வாவோ வாயர்பாடி யருமனையோ
பாற்கடலோ தம்பமோ தங்குமாவலம் பலபலவா
மாற்கமு மாகிநின் றூர்மாதை நாதர்வலங் கொள்பம்பை
மேற்கரை மேகாயில்கொண் டார்புரஞ்சிறிய வெங்கணைக்கே.

எனவருவதே இவற்றிற்குச் சான்றாகக்கொள்ளத்தக்கது.

பின்புலவர்கள், "தெண்ணீர்வயற்றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என ஔவைப்பிராட்டியார் அமுதவாக்காற் பாடல்பெற்றுள்ள அருந்தமிழ்நாடாகிய தொண்டைநாட்டையடைவானெண்ணிவருகையில், இடையிலுள்ள "நாங்கூர்" என்னும் க்ஷேத்திரத்தைக்கிட்டினார்கள். அக்காலிருவருக்கும் பசிநோய் வருத்தலால், அத்தலப்பெருமானைக்குறித்து முடவர்,

"தேங்குபுகழ் நாங்கூர்ச் சிவனேயல் லாளிப்பா
நாங்கள் பசித்திருக்கை ஞாயமோ"—

என்றோதினர். உடனே குருடர்;

போங்காணும்
"கூறுசங்கு தோன்மூசு கொட்டோசை யல்லாமற்
சோறுகண்ட மூளியார் சொல்."

என்றோதினர். இப்படியிருவரும் பாடியவளவில் அப்பெருமான் அருள்சுரந்து ஓரந்தணவடிவாய்வந்து பொதிசோறளித்தருள, அதனை இவர்களுண்டுகளித்து அப்பெருமான்மீதும் ஓர்பிரபந்தம்பாடி அருள்பெற்று அங்குநின்றும் நீங்கித்தொண்டைநாடென்னும் உருவமைந்த பெண்ணிற் கொளியமைந்தவதனம்போல் விளங்குப், ஸ்ரீ காஞ்சிமாநகரத்தையடைந்து "ஏகாம்பர"நாதரைக்குறித்தோர் கலம்பகப்பாடியரங்கேற்றி, அத்தலம் பிறந்தவற்றினுஞ் சிறந்தனவான கச்சபாலயம், திருவேகம்பம், திருமயானம், திருக்காயாரோகணம், மகாகாளேசம், திருமேற்றளி, அனேகபேசம், கடம்பை, பணாதரேசம், மணீசம், வராகேசம், சுரகரீசம், பரசுராமேசம், வீரட்டகாசம், வேதநூபுரம், உருத்திரர்கா, இந்திராலயம், சதுர்முகசங்கரம், திருமாற்பேறு, திருவோத்தூர் என்னும் இத்திருப்பதிகள் இருபதுடை

* ஆற்குழை—ஆலந்தளிர்.

யதாயும், "காமகோட்டமும், குமரகோட்டமும்" விஷ்ணுவாலயங்களும் உடையதாயும் விளங்கலின், அத்தலத்தை நீங்கற்கருமையாய்ச் சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலையில் சிவபிரான் திருவிழா நடக்கையில் பவனிவரும்போது அப்பவனியைச்சிறப்பித்து "ஏகாம்பரநாதருலா" எனவோர் பிரபந்தம்பாடினார்கள். அதையரங்கேற்றுகையில், விநாயகர் துதியெடுத்து.

OFFICE OF THE REGISTRAR OF … REGISTERED 28 MAR 1910 MADRAS

"சாற்றிய வாயிரக்கான் மண்டபத்தின் சார்வாக
வேற்ற முடனே யினிதிருந்து—போற்றும்
விறல்விகட சக்ர விநாயகனை யேத்துந்
திறல்விகட சக்ரா யுதம்."

எனக்கூற, அரசனும், அங்குவந்திருந்த சபையோர்யாவரும், ஆயிரக்கான்மண்டபமும், விகடசக்ரவிநாயகரும் இங்கில்லையேயென, அதற்கிவர்கள் நாமும் அறியோம் அவனும் பொய்சொல்லான் எனக்கூறி அவ்விரண்டும் வெளிப்படுங்கால் அரங்கேற்றுவோமென்று மீண்டும், தென்றிசையாய்ச் செல்லும்வழியில்; மாங்காடென்னும் ஊரின்கணுள்ள ஓர் வேளான் தன்பெண்ணை மாப்பிள்ளையினூர்க்கு அழைத்துக்கொண்டு செல்லுமிடையில் காட்டார்ந்துள்ளவிடத்தில் மகளொடு கலந்து நிற்றலைக்கண்டு இரட்டையரில் முடவர் வியந்து,

"மாங்காட்டு வேளான் மகளை மருமகன்பாற்
போங்காட்டி லின்பம் புணர்ந்தானே"—

என்று கூறக்கேட்ட குருடர், விஷயத்தையறிந்து தக்ஷணமே மிகுந்த சமத்காரமாக,

ஆங்கானும்

"மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு."

எனமுடித்தனர். இங்ஙனம் வழியைக்கடந்து சென்று அங்குதனிகனாயுள்ள 'ஓமளாத'னென்னும், வேளாளனிடஞ்சென்றார்கள். அவனிவர்களைக் காண்டலும் பெரும்புலவர்களென் றறிந்திருந்தும், தனதைசுவரிய கருவத்தினால் சற்றுமதியானிப் பலவாறுவைது வெளியிற்றுரத்த, அவனது அயல்வீட்டுக்காரனும் அங்ஙனமே சற்று

மதியாது சிற, இப்புலவர்கள் மனம்வருந்தி விதிக்கஎன்வந்து இருவருளொருவர்,

"ஒருகாவித் தண்டலம்வா ழோமனா தன்வீ
டிருகாலும் பற்றி யெரிக."—

என்றோதினர். இது கேட்டமற்றொருவர்,

அருகாருக்
"சம்பத் தான்வீடுங் கலந்தெரிக மற்றிவர்கள்
சம்பத்தெல் லாமொழியத் தான்"

எனவோதி அப்பாற்சென்றார்கள். உடனேயவ்விருவர்வீடுந் தற்செயலாய்த்தீப்பற்றிச் சகலசெல்வத்தோடு மழிந்தன.

அவணின்றப்பாற்சென்ற புலவர்கள், பாண்டியதேசத்தினை நோக்கித் "திருநெல்வேலிக்குச்" சென்றார்கள். அங்கேமூங்கிற்காடு நெருங்கிமேலே தழைபடர்ந்து, வழியுங்குறுகியிருக்கின்ற விடத்தே தினந்தோறும் பாற்குடங்கொண்டுசெல்லும் ஓரிடையன், அடியிற் சிவலிங்கவிருப்பதையறியாது செல்ல, அங்குவரும்போதெல்லாம் பாற்குடமிடறிப் பால் சிதருவதுவருதலே ஒருநாள் அவ்விடையன் கோபங்கொண்டு அவ்விடத்தைக் கோடரியால்வெட்டத்துணிய, அதை முடவராகிய புலவர்கண்டு,

"வேயீன்ற முத்தர்தமை வெட்டினு னோரிடையன்
ஞயீன்ற மேனி தயங்கவே"—

எனப்பாட, அதைக்கேட்ட குருடராகிய புலவர்,

நேயாகே
"னைத்தனை நாவென்றே விடறவான் பாற்குடத்தை
யத்தனையும் வேண்டு மவர்க்கு."

எனப்பாடி முடித்துச்சென்றார்கள். இதனையவ்வூரின்கணுள்ளாரறிதலும், இவர்கள் வாக்குவிசேடத்தால் அவர்களுக்குச் சிவபுண்ணியத்திற் சிந்தைசெல்ல, அக்காலத்தரசாண்டிருந்த பாண்டியராசனைக்கொண்டு அச்சிவலிங்கப்பெருமானுக்கோர் ஆலயம்புதுக்கி நித்தியநைமித்தியங்கள் நடத்திவருவதானார்கள். பின், புலவர்கள் "திருவாலவா"யென்னும் மதுரைமாநகரமடைந்து சோமசுந்தரக்கடவுளைத் தரிசிக்

க்கருதிப் பொற்றாமரைத் தடத்துட்சென்று, முடவர்மேற்படித் துறையிலிருக்கக் குருடர் கீழ்ப்படித்துறையிலிருந்து தங்கள் வஸ்திரத்தைத் துவைப்பாராயினர். அக்காலவ்வஸ்திரம் அலசியெடுத்துச் சேர்த்துப் பிழியுஞ் சமயத்தில், தற்செயலாய் அவர்கையினின்று நழுவிநீரில்விழுந்தமிழ, அது கண்டமுடவர்,

"அப்பிலே தோய்த்திட் டடித்தடித்து நாமதனைத்
தப்பினு மம்மையது தப்பாதோ"—

என்றோதிப் பரிகசித்தனர். அது கேட்ட குருடர்வெட்கி, அப்படியே

"யானாலுங் கந்தை யதினுமோ ராயிரங்கண்
போனான் மயிர்போச்சுப் போ"

என்றோதிமீண்டனர். அப்போது முடவர் சற்றுவருந்தி,

"கண்ணா யிரமுடைய கந்தையே யானாலுந்
தண்ணார் குளிரையுடன் றாங்காதோ."—

எனக்கூறினர், அதுகேட்ட குருடர், எண்ணாதி

"ரிக்கலிங்கம் போனாலென் னேகலிங்க மாமதுரைச்
சொக்கலிங்க முண்டே துணை."

எனக்கூறி யுட்கார்ந்தனர். உடனே யச்சொக்கலிங்கப் பெருமானுடையகிருபையால், நீரிலமிழ்ந்த கந்தைவஸ்திரம், நூதனவஸ்திரமாகி, யெழும்பிக் கரையின்கணே தங்கியிருக்க, அதுகண்டமுடவர், குருடராலதனைக்கொணர்ந்து வரச்செய்துலர்த்தி யுடுத்துக்கொண்டு, இருவருந் தங்கள் நித்திய நியதிகளை முடித்துச் சோமசுந்தரக்கடவுளைத் தரிசித்துமீண்டவர்களாய் ஓர்நாள் பாண்டியராஜன் சமுகஞ் செல்ல, அவனிவர்களைக் காண்டலுந் தக்கபரிசில் தரவெத்தனிக்க, அதுகண்ட ஓர் துர்மந்திரி அதைத்தடுக்க, உடனேயிவர்களுட் கண்ணுள்ளவர்கண்டு கோபித்து,

† "புராதன மான கவிப்புல வீரிந்தப் புன்குரங்கு
மாமரம் விட்டிங்கு வந்த தென்னே"—

---

† இது தமிழ்நாவலர்சரிதையில், சித்திரத்தனுமனைப்பாடச் சொல்லப் பாடியது. எனக்காணப்படுகின்றது.

என்றபாட, அதுகாரணம் கண்ணில்லார் அறிந்துகொண்டு,

வந்த வாறுசொல்வேன்

"காதல மன்னுந் தமிழ்மா றனையுந்தன் நம்பியையு
மீரகவ னென்று மிலக்குவ னென்றும்வந் தெய்தியதே."

எனப்பாடிமுடிக்க, இவையெல்லாமுணர்ந்த பாண்டியன், புலவர் மகிழும்படி பரிசில் கொடுத்தனுப்பினன். அவன் பரிசிலாகக்கொடுத்த பொருளையும், தமதுணவுக்காக வேண்டுவனவற்றையும், ஒருவஸ்திரத்தில் முடிந்துகொண்டு, வழிநடக்கையில், மலவிசர்க்கத்திற்காக அம்மூட்டையை ஓர் பிள்ளையார்கோயிலில் வைத்துச்சென்று கழித்துச் சௌசமுடித்துமீண்டு அம்மூட்டையை யெடுக்கப்போயினர். அப்போதம்மூட்டை யவிழ்ந்திருந்ததன்றி அதில் முடிந்துவைத்திருந்த பொருள் மாத்திரமில்லாமற் போனமையால் அங்கெழுந்தருளியுள்ள விநாயகக்கடவுளைநோக்கி ஒருவர்,

* "தம்பியோ பெண்திருடி தாயா ருடன்பிறந்த
வம்பனோ நெய்திருடு மாமாயன்"—

என்று கூறினர், உடனே மற்றொருவர்;

நம்பியவிம்

"மூத்தவனோ நம்பூரான் முடிச்சவிழ்ப்பா னென்செயலாக்
கோத்திரத்துக் குள்ள குணம்."

என்றோதி, யதனைமுடிந்து தலையின்கீழ் வைத்துக்கொண்டு இருவருமங்ஙனே சிலநேரம் சயனித்திருந்து, பின்னரெழுந்துசெல்ல, அம்மூட்டையையெடுத்தனர். அப்போது முன்னிருந்த பாரத்தினும், பதின்மடங்கதிகமாயிருத்தலைக்கண்டு வியந்து முடிச்சவிழ்த்துப்பார்க்க, அதனுள் முன்னர்க்காணாமற்போனபொருள் விசேடமாயிருக்கக்கண்டு மகிழ்ந்து, சிலநாளங்கிருந்து அதன்பின்னொருநாள் அந்நாட்டிலேயே கொடையாளனாகிய "திருவேங்கடமென்பவனையடுக்க, அவனிவர்களுக்கிரங்கிச் சம்மானம்பண்ணப் போந்தருணத்தில், அவன்

* இவ்விஷயம் "புலவர்புராண"த்திலும் வருவதைக்காண்க.
"தம்பியொருபெண்திருடி தாயினுடன்பிறந்தவனுச்சாற்றுமாமன்
கொம்பியவாய்ச்சியர்குலையசெய்திருடி மேனுனதுகுலத்துக்குள்ள
வம்பிதெனநானறிவேனியுமெந்தம்பணந்திருடல்வழக்கோவென்று
தம்பிமுகப்பெருமான்றன்மடிபிடித்தோர்முழுப்பாட்டுஞ்சொன்னனன்றே

தமையனாகிய "கண்ணுக்கினியா" னென்பவன் றடுக்க, அதுகண்[illegible] முடவர் சினந்து,

" தேன்பொழியும் வாயான் திருவேங் கடத்துட னே
யேன்பிறந்தான் கண்ணுக் இனியான்காண்"—

என்றோத, அதுகேட்ட குருடர் விடயமின்னதென்றறிந்து கொண்டவராய்,

யான்சொலக்கேள்

" சீதேவி யார்பிறந்த செய்யதிருப் பாற்கடலுள்
மூதேவி யேன்பிறந்தாள் முன்."

என்றேமுடித்துமீள, இளையானதுகேட்டு வருந்தியுடன்சென்று சமாதானங்கூறித்தந்த பரிசில்களைப்பெற்றுக்கொண்டு நடுநாட்டை நோக்கிச்சென்றனர். அங்கே "திருவண்ணாமலையில்," சாத்தேய மதசித்தாந்தியான "சம்பந்தாண்டா"னென்பவன் தன்றலைமுண்டிதமாகச் சௌளம்பண்ணிக்கொள்ளும் சமயத்தில், இவர்களவண்பாற்செல்ல, அவனிவர்களைக்கண்டு பெரும்புலவர்களென்றறிந்திருந்தும் தனது வித்தியாகர்வத்தினால் மரியாதைசெய்யாமல் ஓர் வெண்பா "மன்னென்"றெடுத்து "மலுக்கெ"ன்று முடிக்கவு[illegible]வென்றனன். அதுகேட்டவிவர்கள் நகைத்து, ஒருவர்

" † மன்னுதிரு வண்ணா மலையிற்சம் பந்த[illegible]க்குப்
பன்னு தலைச்சவரம் பண்ணுவதென்—

என்று கூறினர். உடனே மற்றொருவர்,

மின்னி

" னிளைத்த விடையடவா ரெல்லாருங் கூ[illegible]
வளைத்திழுத்தக் குட்டா மலுக்கு."

---

† இது காளமேகப்புலவர்பாடியதாகத் தனிப்பாடற்[illegible] விநோதரசமஞ்சரியிலுள்ள காளமேகப்புலவர் சரித்திரத்திலும், இக்காலத்து வழங்குகின்றதாயினும், பழையவழக்கு இரட்டையர்க்கே காணப்படுகிறது.

"சொன்னவரைப் பார்த்துமுன்பி னின்னசொற்க ளிவைதாப்பாத் தொடுமெனன்று, னன்னவர்தா முடன்மன்னு மருணைநகர் வாழ்சம்பந் தாண்டானுக்கின், டென்னவிதத் தினுக்காகத் தலைச்சவரம் பண்ணுகின்ற தென்ன மின்னார், மன்னவனைக் காந்தளங்கை கொடுகுட்டா மலுக்கென்றும் வருத்திட்டாரே.

எனவரும் புலவர்புராணத்தையும், தமிழ்நாவலர்சரிதையையும் பார்க்க.

28 MAR 1910 MADRAS

என்று கூற. அதுகேட்ட "சம்பந்தாண்டான்" கர்வமடங்கினவரு ய்த் தக்கபரிசில்கொடுத்துவந்திப்ப, அதுபெற்றபுலவர்கள், மீண்டும் அண்ணாமலைநாதரைத் தரிசித்துக்கொண்டு "கொங்குதேய"த்தினை நோக்கிச்சென்றார்கள். அத்தேயத்திலிவர்கள் ‡ "கொடிமாடச்செங்குன்றூ"ரின்கணெழுந்தருளிய அர்த்தநாரீஸ்வரரைத் தரிசிக்கக் கடைமார்க்கமாகச்செல்லுகையில், அவ்வீதியிலிவர்களை யிடித்துக் கொண்டுசென்ற கொங்குவேளாளர்களுடைய பெண்டிர்களைக்கண்டு ஒருவர்,

"செங்குன்றூர் வேளாண் சிறுமியரெல் லாங்கொழுத்தே
யங்காடிக் கள்வர் தலைகின்றார்"—

என்றுகூற, மற்றொருவர்,

தங்கொழுநர்
"போதா மளவுநன்செய் புன்செய்க் குழைத்துறங்கு
மேதா விடிப்பவ ரன்றே."

என்று கூறினர். இப்பாலிவர்கள் சிவதரிசனஞ் செய்துகொண்டு, கொங்குநாட்டிலிருக்க மனமின்றிச் சோழநாடு செல்லக்கருதித்திரும்புகையில், மலையுமலைச்சாரலுமாகிய கடுவழியிற்சென்று வருந்துங்கால், ஒருவர்,

"குன்றும் வனமுங் குறுகி வழிநடந்து
சென்று திரிவதென்றுந் தீராதோ"—

என்றனர். அதுகேட்ட மற்றொருவர் மனஞ்சலித்து,

வொன்றுங்
"சொடாதாரைச் * சங்கென்றுங் கோவென்றுஞ் சொன்னு
விடாதோ வதுவே யிது.

என்று கூறிநடக்க இருவரும் சோழநாடுகுறுகி வழியில் தம்மைப் போன்றருள்பெற்று ஆசுகவிப்பெருமானாகிய, காளமேகப்புலவரைக்கண்டு தம்முடனழைத்துக்கொண்டு கமலாலயமென்னும் திருவாரூரையடைந்து § தேவாசிரியனைவணங்கிப் புற்றிடங்கொண்ட வன்மீகநாதரையும், வீதிவிடங்கப்பெருமானையும் சர்வலோகநாயகியாராகிய பிராட்டியாரையுந் தரிசித்தனர். அப்போது மேலிருக்கும் குருடர்,

‡ கொங்குநாடேழினிலொன்று.
* சங்கநிதியென்றும், காமதேனுவென்றும்.
§ கோயில்வாயிலிலிருக்குமண்டபம்.

† “நாணென்றால் நஞ்சிருக்கு நற்சாபங் ‡ கற்சாபம்
¶ பாணந்தான் ...................”—

எனப்பாடி அவ்வடியை முடிக்க நாவெழாதிருக்க, அக்கால் அருகிலிருந்த காளமேகப்புலவர், “மண்டின்றபாணமே” எனக்கூறினர். அதுகேட்டுக் கீழிருந்தமுடவர், தம்மால் முடிக்கமுடியாத சீர்களை ஆச்சரியப்படத்தக்க பொருளமைதியுடன் முடித்ததற்கு வியந்து, பாட்டின் எஞ்சியபகுதியை,

தாணுவே
“சீராரூர் வாழுஞ் சிவனே சிரிப்பன்றோ
போரூர் செற்ற நிலை.”

எனப்பாடி முடித்துப்பின், காளமேகப்புலவரை மெச்சி,

“விண்டின்ற கீர்த்தி விளைகாள மேகமே
மண்டின்ற பாணமென்ற வாயினிக்க—கண்டொன்று
பாகொடுதேன் சீனியிடும் பாக்கியம்பெற் றேமிலையே
யாகெடுவோ மூக்கிங்கென் னும்.”

என்று கூறினார்கள். அதுகேட்ட காளமேகப்புலவர் மகிழ்ந்து நம்மையிவர்கள் துதிக்க, நாம்வறிதேயிருத்தல் மரபல்லவென்று கருதி,

“பூண்டான் முறையிற் புவியுணுந்தா தன்மகனு
மாண்டான் மகனும்போன் றனவுமக்—கீண்டெதுதான்
வாய்க்கா § தயிற்தலத்தீர் வானமுது முங்கண்மொழிக்
கேட்க்காதே லென்மொழிக்கிங் கென்.”

---

† இப்பாடலின்பொருள் அக்கினிஸ்தம்பமாய் விளங்கியிருப்பவனே! சிறப்புப்பொருந்திய திருவாரூரில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானே! திரிபுரதகனஞ்செய்தகாலத்தில் உன்கையிலேந்தியவில் நாரியோ நஞ்சிருந்தது. அவ்வில்லோ வளைக்கப்படாத கல்லாயிருந்தது. அம்போ மண்தின்னப்பட்டிருந்தது. இப்படி உனக்குக்கிடைத்த யுத்தாயுதமெல்லாம் ஒன்றுக்கும் உதவாமற்கேவலம் அவலமானவைகளாயிருக்க, சத்துருக்களுடைய நகரத்தை நீ எரித்தாயென்பது எப்படியோ? யோசிக்குமிடத்திற் சிரிப்பாயிருக்கிறதென்பதாம்.

நாண்நஞ்சிருக்குமென்றது - விஷம்பொருந்திய பாம்பென்றும்.

‡ கற்சாபம் - மேருவில்லென்றும்.

¶ மண்தின்றபாணம் - பூமியுண்ட விஷ்ணுவென்றுமாம்.

§ செங்குந்தமரபிலுதித்தீர்.

என்றுகூறித் துதித்து அவர்களிடத்தினின்றும் விடைபெற்றுக் கடிதில் நீங்கிப் பலவிடங்கள்தோறுஞ் சென்று பாடல்பாடிப் பரிசில்பெற்றுவருங் காலத்துத் தமக்கெதிர்ப்பட்ட ஒரு மங்கையைக்கண்டு அவளிடையை வியந்து,

“கடையொன்று போதகங் கோடொன்று மென்முலை நாட்டமிரு
கடையொன்று நீல விழியிணை யாலங் கமலமுகப்
பெடையொன்று தேமற் பிறைசூடி நாதன் பிரமன்வெற்பி
விடையொன்று மில்லைமற் றெல்லா வுறுப்புமுண் டேந்திழைக்கே.

“பாதாதிகேச முதலா விவளைப் படைத்தமலர்
வேதா மருங்குல் வெளிவைப்ப னேவிந்த மேதினியி
லாதார மின்றி யிரண்டுள நீரந் தாங்கிற்குமோ
ஏதா யினுங்கொஞ்ச மில்லா திராதிடை யேந்திழைக்கே.”

எனப்பாடியும்,

“ஓங்கிய செந்தமிழ்த் தாதற் கடிமையவ் வூரதனு
ளிங்கவி சொல்வது மில்லையென் றேகம்ப நாடன்சொல்ல
வாங்கவ னேறுஞ் சிவிகை சுமந்து மடப்பையிட்டுத்
தாங்கவி கொண்டதங் கூவந்தி யாக சமுத்திரமே.”

“மட்டாருஞ் செங்கழு நீர்மணி மார்பனை வாழ்த்துமந்தக்
கிட்டாத யாசகர் கிட்டிவந் தாலதைக் கேட்டுமுன்னாட்
பட்டோலை வாசித் தவரவர்க் குள்ள பரிசையெல்லாந்
தட்டா தளிப்பது கூவந் தியாக சமுத்திரமே.”

எனக் கூவத்தின்கண், பெருங்கொடைவள்ளலாகிப் புகழ்பெற்றுத் திகழ்ந்த நாரணனென்பானைப்பாடி மகிழ்ந்திருந்தனரென்ப. இவை, தொண்டைமண்டல சதகத்தின் மேற்கோளில்,

“இடுவார் சிலரு மிடாதார் பலரும்
வடிவிலா வையத் திருக்கப்—படிபாவி
கூவத்து நாரணனைக் கொன்றாயே கற்பகப்பூங்
காவெட்ட லாமோ கறிக்கு.”

எனவருவதைக்கண்டுகொள்க. அன்றியும், வீரசம்பு என்பவர்க்கும் இவர்க்கும் நடந்த சம்பாஷணையிலும், கூவராயன் ஈகைதலைப்புகழ்திருப்பது வருமாறு:—

### வீரசம்புவினு.

" பதிவீர சம்புவென்று பாராமற் கல்விச்
சதுமுனவி ரட்டையரே யீகை—யுதவில்வலக்
கைத்தலத்திற் கொண்டு களிக்காம லும்மிடக்
கைத்தலத்திற் கொள்ளுவதேன் காண்."

### இவர்கள்விடை.

" கூவாரா யன்றியாகக் கொள்வோம் வலக்கைமுடி
யாவர் தரினுமிடக் கைகொள்வோம்—பூவுலகின்
மின்மணியினார்மதனே வீரசம்பு வேயினிநா
மின்பமுறேமே மினி."

### வீரசம்புவினு.

" என்னுடைய பெரும்புகழு மிருஞ்சீரு
மென்னுடைய வீகையுங்கண் டெப்படிநம்—முன்னவனை
யாவனுட னேயதிகஞ் சொன்னீ ரிரட்டையரே
கூவாரா யன்னியல்லென் கொல்."

### இவர்கள்விடை.

" மாதாபி தாவுமவன் மன்னுகுரு தெய்வமவன்
னாதா வவனே தருங்கீர்த்திக்—காதாரன்
றியாக சமுத்திரன் றன்கூவ ராயன்றன்
னீகைதனைச் சொல்லவெளி தே."

### வறுமைவந்தடைந்து வருந்தியபோது, தெய்வங்களை நோக்கி யுரைத்தது.

" கேட்ட வரமளிக்குங் கீர்த்தியுள்ள தெய்வங்காள்
கூட்டோடே யெங்கே குடிபோனீர்—பாட்டாய்கேள்
செல்கால மெல்லாஞ் செலுத்தினோ மல்காலங்
கல்லானோஞ் செம்பானோங் காண்."

### இரட்டையர் பாடிய வெண்பா.

" கண்ணாடி காட்டுங் களிறுஞ் சுரைப்பழத்தி
னுண்ணாடு புக்க வுறுபொருளு—மண்ணா

கனங்குறைந்த வாறென் கயவர்பாற் சென்று
தினர்தெரிந்த வாறெனவே செப்பு.”

தெரிந்தவாறுவது, கயவரை முன்காட்சியிற் கனமாகநினைத்துப்பின் இலேசாகத்தெரிந்தவாறுமென்க.

இனிப், புலவர்களிருவரும் காளமேகப்புலவரை மீண்டுங்காண வேண்டுமென்னும் விருப்பால் அவருடைய வாசஸ்தானமான திருவானைக்காவுக்குவர, அப்போது தெய்வகதியால் அப்புலவர் தேகவியோகமெய்தி அவரது திருமேனிமயானத்தில் வேகக்கண்டு இவ்விரு புலவர்களுந் துக்கித்து,

“ ஆசு கவியா லகில வுலகெங்கும்
வீசு புகழ்க்காள மேகமே—பூசுரா
விண்டின்ற செந்தழல்வாய் வேவதே யையையோ
மண்டின்ற பாணமென்ற வாய்.”

எனப்பாடிச் சோழநாட்டிலுள்ள பிறதலங்களையுந் தெரிசித்துக்கொண்டு மீளவு முன்விட்டுவந்த தொண்டைநாட்டைநோக்கி நடந்துவருங் காலையில், காஞ்சிமாநகரத்தில் அரசாண்டிருந்த சோழவமிசத்தினன் ஓர்நாள் யாதுகருதியோ யாகஞ்செய்தற்கெண்ணிப் பூமியைத் திருத்துகையில், மண்மேடாயிருந்தது கரைந்து “ஆயிரக்கான்மண்டபமும், விகடசக்கர விநாயகராலயமும்” விளங்கக்கண்டு, ஆனந்தக்கடலிலாழ்ந்து பரவசனாய் இவ்விருபுலவர்களையும் ஒற்றரைக்கொண்டு வரவழைத்து அவர்கட்கு வந்தனைவழிபாடு புரிந்து ஓ! தெய்விகப்புலவர்களே! தாங்களுலாவிற்குறித்தபடியே நிகழ்ந்தன. அதியற்புதமே! தங்களுலாவுந்தெய்விகவுலாவே எனப்புகழ்ந்து அரங்கேற்றல்செய்வித்துப் புலவர்களுக்குக் கனகமழைசொரிந்து சந்தோஷப்படுத்தினன்.

அன்றுமுதல் அவ்வுலாவிற்குத் * தெய்விகவுலாவென்று பெயராயிற்று. இவ்வாறிப்புலவர்கள் சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு, நடுநாடு, தொண்டைநாடுமுதலிய எல்லாநாட்டிலுமுள்ள சிவாலயமாதிய தேவாலயங்களைத் தரிசித்துக்கொண்டு முடிவில், கைலையங்கிரிக்கிருப்

* ஏகாம்பரநாதருலா.

பீடமாகிய வடநாடடைந்து, அதுமுதல் தாங்கள் ஆங்காங்குதரிசித்த சிவமூர்த்தி, விஷ்ணுமூர்த்தி, முதலியவைகளில், சுவயம்புமூர்த்திகளைக்குறித்துச் சுவயம்புலா என்னுமோர் பிரபந்தம்பாடி, மீண்டும் அம்மூர்த்திகளைக்குறித்து அம்மானை என்னுமோர் பிரபந்தமும்பாடத்தொடங்கி, அவ்வம்மானை என்னும் பிரபந்தத்தில், ஒருவரொரு தலத் தேவதையின் திருவிளையாடல் அடியிற்காட்டுமாதிரியாக இன்னதென் றோரடியால் குறிப்பிக்க, மற்றொருவர் அதிற் ‡ பிரசினங் கற்பித்து, வேறோரடியால் வினவ, அதற்குக் கலைமகளார் வினோதார்த்தமாகத் தனியடியால் விடைதர, இப்படி யநேகம் பாடல்களை மூவரம்மானை எனவழங்குமாறு திருவாய்மலர்ந்தனர். அவை வருமாறு:—

சித்தம்பூர் வாழுஞ் சிவனளித்த பிள்ளையார்
மெத்தப் பெருவயிறு வீங்கினர்கா ணம்மானை
மெத்தப் பெருவயிறு வீங்கினரே யாமாயி
னித்தரையின் மீதவருக் கேச்சன்றோ வம்மானை
யிர்வுபகல் குட்டுணிக்கிங் கேச்சுண்டோ வம்மானை.

ஆதார மாங்குடந்தை யாதிரும் பேச்சுரனார்
கோதாடு மன்மதனைக் கொன்றெரித்தா ரம்மானை
கோதாடு மன்மதனைக் கொன்றெரித்தா ராமாயின்
மாதாபி தாக்கள்பழி வாங்காரோ வம்மானை
வாங்குதற்கு முன்வாயின் மண்விழுந்த தம்மானை.

இப்பூமி தன்னி லியல்பாந் திருத்தணியில்
மூப்பு விளையு முருகருக்கே யம்மானை
மூப்பு விளையு முருகருக்கே யாமாயி
னப்பவருக் கங்கே யரிதல்லோ வம்மானை
யவர்க்குமுக மாறானா லப்பரிதோ வம்மானை.

அடுத்ததிருக் காவிரிசூ ழணியரங்க ரெப்போது
மெடுத்ததிருக் கோயிலைவிட் டெழுந்திரா ரம்மானை
எடுத்ததிருக் கோயிலைவிட் டெழுந்திரா ராமாயிற்
படுக்கையில்வி டந்தீண்டிப் பட்டனரோ வம்மானை
பட்டனரென் றன்றோ பருந்தெடுத்த தம்மானை.

‡ பிரசினம் - வினா.

தெண்டிரைசூழ் தில்லைச் சிவகாமித் தாயார்க்குக்
கண்டமெலா ஞானக் கரும்பதுகா ணம்மானை
கண்டமெலா ஞானக் கரும்பதுவே யாமாயி
னண்டர்பிரா ஞலைதனி லாட்டானோ வம்மானை
யாட்டிப் புலியூ ரமர்ந்தனன்கா ணம்மானை.

எனவருமாற்றானறிக. இன்னணம் அளவற்ற பாக்கள்பாடிப்பலவற் புதங்களை விளைத்திருந்து சிவானந்தப்பெருவாழ்வடைந்தனரென்ப.

இப்புலவர்கள் கலம்பகம் பாடுவதில் மிகச்சிறந்தவர்களென்பதை,

வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் செயங்கொண்டான் விருத்தமென்னு
மொண்பாவுக் குயர்கம்பன் கோவையுலா வந்தாதிக் கொட்டக் கூத்தன்
கண்பாவு கலம்பகத்திற் கிரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காச லாதொருவர் பகரொணாதே.

எனப்பிற்காலத்தார் பாடியுள்ள செய்யுளே தக்க சான்றாம்.

## இப்புலவர்கள் திருவேகம்பமுடைய நயினார்பேரில் பாடிய வண்ணம்

மறுத்தோன்ற வெளுத்தபிறை படப்பாந்த ளிடைச்செருகி
வளர்த்தோங்கி முடித்தசடை யார்—காஞ்சனை மனையார்
மலர்க்காந்தண் முறுக்கவிழ விதழ்த்தேன்கள் குறித்தொழுகி
மடைத்தேங்கி யடைத்து வருநீர்—போஞ்சுழிவழியே
சிறுத்தூண்டில் முரித்தகற வாக்காம்ப லுழக்கியொரு
சிறசசெம்பை முறித்து வெடிபோய்—வீழ்ந்தயலருகே
திடப்பாங்கர் முடக்கமுகின் மடற்கீண்டு களித்துவரு
திருக்காஞ்சி புரத்தி றைவரே—காம்பராடியே
குறித்தோர்ந்து தடிக்குளுடல் வளைத்தாம்பி முளைத்தனைய
குடைக்காம்பு பிடித்து வரும்வே—தாந்தவிர தியீர்
குலக்காந்த ளெருத்தனெனு குலக்காந்தி யொருத்தியிரு
குடித்திங்கு விளைத்து மிருமால்—பூங்கொடியனையா
ளுறச்சேர்ந்து மடித்தலையள் வளர்த்தேங்க டமக்குமல
வுயிர்ப்பாங்கி தமக்கு மல்பா—தாம்புமலரே
வுலைப்போன்ற பாற்பொதிபி னடித்தீந்து விராற்கருகி
யுலக்கான்ற சாத்தில் வருநீர்—தேர்ந்தளிர்செறிவீரே.

இவ்வளவே, இரட்டைப்புலவர்கள் வரலாருகத்தெரிந்தவை. இச்
சரிதங்களால் இரட்டைப்புலவர் தெய்விகப்புலமைவாய்ந்த பெரி
யோர்களென்பதும், ஐங்கரக்கடவுளே இப்புலவர்கள் வசைக்கவிகே
ட்க விருப்பங்கொண்டு வலிந்தாட்கொண்டு பாடப்பெற்ற பேறுடை
யார்களென்பதும், பூமியில் மறைந்திருந்த ஆயிரக்கான்மண்டபமும்
விகடசக்கர விநாயகராலயமும் வெளித்தோன்றப்பாடிய உத்தமகவி
களென்பதும், சிவபுராணக்கதைகள் பலவற்றையும் மிகப்புராதன
மான நூல்களின் கருத்துக்களையும், தம்முடைய நூல்களுள் மிக
அழகாக அமைத்துப்பாடிப் பிற்காலத்தார்க்கு வழிகாட்டிப்பெரு
ம்புகழ்பெற்ற மகோபகாரிகளென்பதும், மற்றும் இவர்களது உத்
தம குணவிசேடங்களும் நன்கு விளங்கும்.

இவர்களுக்கு வழங்கிய "இரட்டைய" ரெனும் பெயர் இப்புல
வர்களுள் ஏற்பட்டிருந்த ஒற்றுமையுணர்ச்சியாலும், அங்கஹீனர்
களாய்ச் சேர்ந்த காரணத்தால் ஒருவர் சகாயமின்றி ஒருவர் வாழ
முடியாததாலும், இப்புலவர்களுக்கு இப்பெயர் வழங்கியிருக்கலாம்
போலும். இங்ஙனம் சீரும் சிறப்பும் தெய்வப்புலமையும் நிரம்பி
இப்புலவர்கள் திகழ்ந்திருந்தது நந்தமிழகமெனின் இதன்பெருமை
அளவிடற்பாலதோ !

இனி இப்புலவர்பிரான்கள் பாடியனவாக மேலே குறித்தபா
டல்களில் "அப்பிலே தோய்த்திட்" என்பது ஒப்பிலாமணிப்புலவர்
வரலாற்றுடனும், படிக்காசுப்புலவர் வரலாற்றுடனும் "மன்னுதிரு
வண்ணமலை" என்பது காளமேகப்புலவர் வரலாற்றுடனும் "தேன்
பொழியும்வாயான்" என்பது அந்தகக்கவிவீரராகவமுதலியார், வர
லாற்றுடனும், "தம்பியொரு பெண்டிருடி" என்பது இராமகவிரா
யர் வரலாற்றுடனும இக்காலத்துவழங்குகின்றன. இவற்றில் பாட
பேதங்களும் சிலவுள

இனி இரட்டைப்புலவர்காலமின்னதென்பதை ஆராய்வோம்.

வில்லிபுத்தூரர் மகனர் வரந்தருவார் பாடிய பாரதச்சிறப்புப்
பாயிரத்தில்,

எக்குடிவளிகைபரப்பிவருநாளில்யாருமுரைத்தவிந்தநாட்டிற்
கொங்கர்தலைவராபதியாட்கொண்டானென்றொருவண்மைக்குரிசிறேன்றி
வெங்கலியின்மூழ்காமற்கருடைப்போர்வெள்ளத்துவிழாமனறன்காஞ்
சங்கமெனமூச்சங்கத்தண்டமிழ்நூல்கலங்காமற்றலைகண்டானே.

ஆற்றியமெய்ச்செல்வத்தாலளகைவென்றிருக்கவிஞலமாருள
மாற்றியபொற்றடமதில்சூழ்வக்கபாகைநிலைநத்தின்வடிவம்போலத்
தோற்றியவக்கொங்கர்பிரான்சூழ்சபிறாருட்கொண்டான்றனதோடு
போற்றியவிப்புவிமுழுதுந்தன்றிருப்பேர்மொழிகொண்டேபுரந்தாளம்மா.

பிறந்துய்யக்கொண்டவனிப்பேருலகம்பெருவாழ்வுகூருநாளி
னிறைந்தபுகழ்ச்சனிநகர்வாழ்வில்லிபுத்தூரரைநோக்கிநீயுநானும்
பிறந்ததிசைக்கிசைநிற்பப்பாரதமகாபெருங்கதையைப்பெரியோர்தங்கள்
சிறந்தசெவிக்கமுதமெனத்தமிழ்மொழியின்விருத்தத்தாற்செய்கவென்றான்

எனவருதலால் வக்கபாகையிற் கொங்கர் குலபதியாய்வந்த ஆட்கொண்டான் என்னும் வள்ளல் சனியூர் வில்லிபுத்தூரரைப்பாரத விருத்தம் பாடும்படி வேண்டினன் என்பது அறியப்படுகின்றது. தமிழ்நாவலர் சரிதையில்,

> சாணர்க்கு முன்னிற்குமாட் கொண்டநாயகன் தமிழ்க்கொங்கர்கோன்
> பாணுற்றலரிவண்டு சேர்வக்கைநகராதி பக்கத்திலே,

என இரட்டையர் பாடுதலானும், இதிற்காணப்படும் வக்கைநகர் இவ்வக்கபாகைபோயாமென்பதும், அன்றி ஆட்கொண்டநாயகன், கொங்கர்கோன் எனப்படுவானும், இக்கொங்கர் குலபதியாகிய ஆட்கொண்டானே என்பதும் பெயரொற்றுமைபற்றி எளிதிலறியப்படும். இதனால் பாரதவிருத்தம்பாடிய வில்லிபுத்தூரரும், இரட்டையரும் ஒருகாலத்தவர்களாதல் நன்கு தெளியப்படும்.

அன்றியும், வில்லிபுத்தூரர்க்கும், திருப்புகழ்பாடிய அருணகிரிநாதர்க்கும், "கந்தரந்தாதி" என்னும் ஒரு நூலுக்கு உரைகூறும் விஷயமாகப்பெருஞ்சம்வாதம் நிகழ்ந்ததாக டிஸ்டிரிக்டு முன்சிப்பாகவிருந்து பென்ஷன்பெற்றுக்கொண்ட வடக்குப்பட்டு ஸ்ரீமத்-சு. சுப்பிரமணியபிள்ளையென்பார் வெளியிட்டுள்ள அருணகிரிநாதர் திருப்புகழ் முதற்பாகம் இரண்டாம்பதிப்பில் அவர் குமாரர் ஸ்ரீ: வ.

சு. செங்கல்வராயன் என்பார், "அருணகிரிநாதர் ஆராய்ச்சி" என்ற தலைப்பின்கீழ் நன்கு விளக்கியிருக்கின்றனர்.

திருவண்ணாமலையிற் பிரபலமாகவிருந்த "சம்பந்தாண்டான்" என்பானும், அவர்காலத்திருந்ததாக அறியலாவதுடன் அருணகிரிநாதர்க்கும், சம்பந்தாண்டானுக்கும், பத்திகாரணமாக ஓர்வாது நடந்தேறியதாகவும் தெரிகின்றது. அருணகிரிநாதர்க்கும், வில்லிபுத்தூரார்க்குப் நடந்த சம்வாதமும், சம்பந்தாண்டானுக்கும், அருணகிரிநாதர்க்கும் நிகழ்ந்த தர்க்கவிஷயமும், நாம் தக்கசரிதமுகத்தானறிவதால், வில்லிபுத்தூரார், அருணகிரிநாதர், சம்பந்தாண்டான் இம்மூவரும் ஒருகாலத்தவராகக் கொள்ளத்தடையில்லை. இவர்கள் திருவண்ணாமலையில், இங்கிலீஷ் 1450-ம௵ அரசுபுரிந்த பிரபுடதேவராஜன் காலத்தவரென்பதை ஸ்ரீ: வ. சு. செங்கல்வராயன் அவர்கள் தக்கசாஸன ஆதாரங்கண்டு கருதுகின்றார்கள். அருணகிரிநாதர்காலம் இற்றைக்கு 460-ஆண்டுகட்கு முற்பட்டதென்று நிச்சயிக்கையில், இவருடன் வாதுநிகழ்த்திய வில்லிபுத்தூரார்க்கும் இக்காலமேயாமென்பது சொல்லாமலேயமையும். வில்லிபுத்தூரார்க்கு 460-வருடங்கள் ஆம்போது நமது இரட்டைப்புலவர்க்கும் அஃதே பொருந்திற்றும். காரணம், வக்கைநகர் வரபதி ஆட்கொண்டானை வில்லிபுத்தூராரும், இரட்டையரும் பாடுதலானேயாமென்க. இச்சிற்றாராய்ச்சியில் நமது தெய்வப்புலமையாளர் இற்றைக்கு நானூற்றறுபது வருடங்கட்குமுன் விளங்கியவரென்றுகொள்வதே பொருத்தமுடைத்தாம்.

இரட்டைப்புலவர் காலத்தைப்பற்றி மஹாமஹோபாத்தியாயர்-ப்ரஹ்மஸ்ரீ: உ. வே. சாமிநாதையரவர்களும், திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகத்தின் முகவுரையில், தொல்காப்பியத்தேவர் காலத்தைக் கூறவந்தவிடத்து, "இரட்டையர்களுடைய காலத்திற்கு முற்பட்டவரென்று தெரிதலால், இந்நூலாசிரியர், அவர்களாற் பாடப்பெற்ற வரபதியாட்கொண்டானென்னும் பிரபுவுக்கும், அவர் விருப்பத்தின்படி பாரதம்பாடிய ஸ்ரீ: வில்லிபுத்தூராழ்வாருக்கும் அவர்காலத்தவர்களாகிய ஸ்ரீ: அருணகிரியார் முதலியவர்களுக்கும் முற்பட்டவராக எண்ணப்படுகின்றார்." என்று கூறுவதையும் இதற்கு ஆதாரவாகக் கொள்க.

இரட்டைப்புலவர்கள் செங்குந்தமரபினரென்பதை,

"அத்தை மகன்குரு டம்மான் மகன்முடி மாஇக்கீழ்மே
லொத்துறைந் தேகூறு பாடோ டணிகொ ளுலப்பில்கவி
முத்தரி லோதியே கம்ப ருலாமுன் மொழிந்தெவருஞ்
சித்த முவப்பத் திரிவோர் செங்குந்த சிவாக்கியரே."

எனவரும் திருவிருத்தத்தானுமுணர்க.

இப்புலவர்கள் திருவாமாத்தூர்க்கலம்பகம்பாடிய வரலாற்றைப் பற்றிச் சுப்பிரமணியக்கடவுள் க்ஷேத்திரக்கோவைப் பிள்ளைத்தமிழ்ச் சிற்றிற்பருவத்திற்கண்ட ஒருசெய்யுள் வருமாறு:—

"எம்பால்வந்தீரிரட்டையர்நீரெம்மைப்பாசுவீரென்றே
யெம்மானருளத்திருமுன்னேயிருந்தேகலம்பகம்பாடச்
செம்பாகஞ்சேர்கலம்பகத்திற்சிறந்தகங்கைமேற்கரையிற்
றிகழாலயங்கொண்டாரென்றுசெப்பப்புலவரதேதென்ன
நம்பாநாங்களுரைத்தபடிசநியைக்கீழ்பாற்றிருப்பென்ன
காதனருளால்வடக்குவிட்டுநெனுறுங்கீழ்பாற்பெருகிவரும்
பம்பாநதிசூழாமாத்தூர்ப்பாலாசிற்றில்சிதையலே
பச்சைமயில்வாகனனுன்னைப்பணிவோஞ்சிற்றில்சிதையலே."

இரட்டைப்புலவர்சரித முற்றிற்று.

கோவைச் சாரதா விலாஸச் செந்தமிழ்ச் சங்கத்தில்

# விற்கப் பெறும் புத்தகங்கள்

1. செங்குந்தர் குலப்பிரகாசிகை. [illegible]

(இது கைக்கோளரவோர் அத்தியாவசியமாய் அறியவேண்டிய அரும் பெரும் விஷயங்களடங்கியதாய்ப் படிப்பதற் கினிமையாக்குஞ் சொல்லலங்காரத்தோடமைந்தது.)

2. பொய்யா மொழிப்புலவர் சரிதம். [illegible] 2—[illegible]

3. படிக்காசுப் புலவர் சரிதம். [illegible] 2—[illegible]

4. இரட்டைப் புலவர் சரிதம். [illegible] 3—[illegible]

இம்மூன்றும் மதுரைச் செந்தமிழ்ப் பத்திரிகையின்கண், வெளிவந்தது.

இங்ஙனம்,

சி. கு. நாராயணசாமி முதலியார்.

118. ராமன் வீதி.

கோயம்புத்தூர்.